பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர்: 15] சென்னை: வைகாசி 9 (22—5—68) புதன் ★ வெளியூர்: வைகாசி 10 (23—5—68) வியாழன் [இதழ்: 288

திசை தவறிவிட்ட காங்கிரசு!

பம்பாய், மே 22—

"சோஷலிசத்தைப்பற்றிக் காங்கிரசு விடாமல் பேசிவந்தபோதிலும், அந்த இலட்சியத்தை நோக்கி அது முன்னேறவில்லை!

"இந்தத் திசையில் எடுக்கப்பட்ட ஒரே ஒரு நடவடிக்கை, பொதுத் துறையைத் தோற்றுவித்தது மட்டுந்தான்!

"சனநாயக சோஷலிசம் நோக்கிச் செல்லும் இலக்கை, காங்கிரசு தவறிவிட்டுவிடக்கூடும் என்றே நான் அஞ்சுகிறேன்."

—மத்திய உள்துறை அமைச்சர்
சவாண்

தூய்மைமிக்கவருக்குத் துணிவுண்டா?

கழக ஆட்சியுடன் காங்கிரசு ஆட்சியைப் பற்றியும் விசாரணை நடத்தலாமா?

சுப்பிரமணியத்திற்கு அமைச்சர் மு. கருணாநிதி அறைகூவல்

தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம், "14 மாத தி. மு. கழக ஆட்சியைப் பற்றி உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து விசாரித்து, 'தம்பிமார்கள் எவ்வளவு சம்பாதித்திருக்கிறார்கள்' என்பதனைக் கணக்கெடுக்க வேண்டும். நீதி விசாரணையில், 'தி.மு.க.-வினர் நியாயமாகத்தான் நடந்துகொண்டிருக்கிறார்கள்' என்றும்; அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்யவில்லை' என்றும் அறிவிக்கதால் வருகின்ற நகராட்சித் தேர்தலிலும், 1972-ம் ஆண்டுத் தேர்தலிலும் காங்கிரசு போட்டியிடாது" என்று அறைகூவல் விட்டிருக்கிறார்.

"'நகராட்சித் தேர்தலிலும், 1972-ம் ஆண்டுத் தேர்தலிலும் போட்டியிடாது' என்று அவர் அறிவிக்கத் தேவையில்லை; போகிற போக்கைப் பார்த்தால், '1972-ல் போட்டியிடும் அளவுக்குக் காங்கிரசு இருக்குமா' என்றே தெரியவில்லை! 1972 தேர்தலில் போட்டியிடாமலிருக்க இப்படிப்பட்ட அறைகூவலை முன்கூட்டியே அவர் விடுகிறார் போலும்!

"நீதி விசாரணைக்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்; எப்படி? 14 மாத காலத் தி. மு. க. ஆட்சியில்—10 ஆண்டுக் காலக் காங்கிரசு ஆட்சியில்—இந்த நாட்டில், 'அரசியல்' என்ற பெயரால் எவரெவர் சம்பாதித்தனர்? கொள்ளை இலாபமடித்தனர்? யார் யார் அச்சகங்களை வாங்கினர்? யார் யார் வீடு கட்டிக் கொண்டனர்? என்ற கணக்கெல்லாம் வர வேண்டும்.

"இருபதாண்டுகள் அல்ல – 10 ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியில் – 14 மாத காலத் தி. மு. கழக ஆட்சிக் காலத்தில் நடந்தவற்றைப் பற்றி விசாரணை நடத்த சி. சுப்பிரமணியம் தயாரா? 'தயார்' என்றால், நீதி விசாரணைக்கு நாளைக்கே நாங்கள் தயார்!

"நீதிபதியின் தீர்ப்பைக் கேட்பவருக்குத் தேர்தலில் மக்களே தீர்ப்பளித்து விட்டார்களே!

"1961-ஆம் ஆண்டில் இவர் தமிழகத்தின் நிதியமைச்சராக இருந்தபோது, முறையற்ற நீதிபதி நியமனம் – அதிலே சி. சுப்பிரமணியம் தலையிட்டாரே!

"இன்றையத்தினம், 'தி. மு. கழகம் நிர்வாகத்திலே தலையிடுகிறது' என்று குறைகூறுகிற சுப்பிரமணியம், நீதியிலேயே தலையிட்டிருக்கிறார்! நிர்வாகத் தலையீட்டைவிடப் பயங்கரமானது நீதியிலே தலையிடுவது!

"எங்களைப்பற்றி நீதிபதி விசாரணை நடத்துவது பிறகு இருக்கட்டும்; முன்பு நடந்த நீதிமன்ற விசாரணையில் சுப்பிரமணியத்தைப்பற்றி நீதிபதி கூறிய கருத்துக்கு, 'சுப்பிரமணியத்தின் பதில் என்ன' என்று அவரே சொல்லட்டும்; 'நிர்வாகத்தில் தி. மு. கழகம் தலையிடுகிறது' என்கிற சுப்பிரமணியத்தின் அறைகூவலை மிகுந்த பெருமையோடு ஏற்றுக்கொள்கிறேன்!

"நிபந்தனையோடு—20 ஆண்டுக் காலத்திலல்ல—பத்தாண்டுக் காலக் காங்கிரசு ஆட்சியில்—யார் யாருக்கு ஆலைகளுக்கு அனுமதி வழங்கினார்கள்? யார் யாருக்குப் பஸ் ரூட்டுகளை வழங்கினார்கள்? யார் யாரைப் பெரிய மனிதர்களாக்கினார்கள்? அச்சக அதிபர்களாக யார் யாரை ஆக்கினார்கள்? எந்தெந்த வகையில் அதிகாரத்தைத் துர்விநியோகம் செய்தார்கள்? 10 ஆண்டுக் காலக் காங்கிரசு ஆட்சிக்கும்—14 மாத கழக ஆட்சிக்கும் சேர்த்து உயர் நீதிபதி விசாரணை நடத்தட்டும்! தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தயாரா?

"சுப்பிரமணியம் நாள்தோறும் பேசுகிறார்—நாளையே பதிலளிக்கட்டும்; பதிலளிப்பார் என்று நம்புகிறேன்; ஏனென்றால், அவ்வளவு 'துணிவுள்ளவர்; தூய்மையானவர்' என்று தன்னைப்பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பவர்—பதிலளிக்கட்டும்!"

விரைவில் தமிழகம் விடையளிக்கும்!

"அரியானா தேர்தல் பற்றிக் காங்கிரசார் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள்! அங்கே பெற்ற வெற்றிக்கு இங்கே மீசை முறுக்குகிறார்கள்!

"அரியானாவில் 1967 பொதுத்தேர்தலில் காங்கிரசுக்குக் கிடைத்த இடங்கள் 48-தான்; இப்போது கிடைத்துள்ள இடங்களும் 48தான்!

"அரியானாவைச் சொல்லி, 'தமிழ்நாட்டில் தென்காசியைப் பிடிப்போம்' என்கிறார்கள். கேரளத்தைக் காட்டி, 'தமிழகத்தில் நகரசபைகளைப் பிடிப்போம்' என்கிறார்கள்!

"தென்காசி, ஏற்கனவே காங்கிரசு வெற்றி பெற்ற இடம்; அதை இழக்காமல் இருக்க அரும்பாடுபடுவார்கள்! ஏதேதோ பேசுவார்கள்!

"தமிழகத்தில் இப்போதே நாற்பதுக்கு மேற்பட்ட நகராட்சிகளில், காங்கிரசின் ஆதிக்கம் தான்! எட்டு – ஒன்பது நகராட்சிகளில்தான் தி. மு. க. தலைவர்கள் இருக்கிறார்கள்.

"அந்த நாற்பதில், காங்கிரசு எத்தனை இழக்கப் போகிறது? புதிய நகராட்சிகள் இருபதில் எத்தனை பிடிக்கப் போகிறது?—இந்தக் கேள்விகளுக்கு விரைவில் விடையளிக்கத்தான் போகிறது தமிழ்நாடு!

"அதற்குள், பொறுப்புள்ளவர்கள் தாறுமாறாகப் பேசுவது முறையல்ல. பொதுத் தேர்தல் வேறு—நகராட்சித் தேர்தல் வேறு! அதனால் தான், 'நகராட்சித் தேர்தலுக்குக் கட்சி முத்திரை வேண்டாம்' என்கிறது கழகம்! அதனைக் காங்கிரசார் கேட்கவில்லை.

"1962-ல், திருச்சி சட்டமன்றத் தொகுதி கழகத்திற்குக் கிடைத்தது; தொடர்ந்து நடந்த நகராட்சித் தேர்தலில் காங்கிரசு வென்றது! இன்றளவும் அங்கு காங்கிரசுதான்! திருச்சி நகராட்சித் தலைவர், இந்த சட்டமன்றத் தேர்தலில், நமது கழக நண்பர் எம். எஸ். மணியிடம் தோற்றார்; அதற்காக, நகராட்சித் தலைவர் பதவியை அவர் இராஜினாமா செய்துவிடவில்லை!

"ஆனால் காங்கிரசார், 'கேரளத்தில் ஒரு கீதம்—தமிழகத்தில் ஒரு பாடல்' என்று மாற்றி மாற்றிப் பாடுகிறார்கள்! அதன் முடிவினை சுவைக்கத்தான் போகிறார்கள்—சனநாயக ரீதியில்!

(சென்னை 26-வது வட்டத்தில்)

டிகால் ஆட்சியின் நிலை?

நிர்ப்பந்தமான நிலைமைகள் உருவாகியதன் எதிரொலி

குழப்பத்திற்கு முடிவு காண்பதற்கு பொதுமக்கள் வாக்கெடுப்பு?

'இனி என்னென்ன நடைபெறும்' என்று சொல்ல இயலாத அளவில், பிரான்சில் கொந்தளிப்பு மிக்கதோர் நிலை உருவாகியிருக்கிறது!

டிகால் அரசையே வீழ்த்தும் அளவுக்குப் 'புரட்சி' ஒன்று உருவாகி, அது, பொது வேலை நிறுத்தமாக மாறிவிட்டிருக்கிறது!

'சனநாயகக் கட்டுக்கோப்புக்குள் டிகால் ஆட்சி செயல்படுகிறது' எனக் கூறப்பட்டாலும், 'அது, சர்வாதிகாரப் போக்கில் இயங்குவதாக இருக்கிறது' என்பதுதான் முக்கியமாகக் கூறப்படும் குறைபாடாகும்.

இதற்குப் பின்னணியில் எவ்வளவோ அரசியல் சூழ்நிலைகள் இருப்பினும், 'தேர்வு முறைகள் உட்பட பல்கலைக் கழகங்களில் சீர்திருத்தம் அவசியம்' என்பது மாணவர்களின் கோரிக்கையாகும்; இதனையொட்டி அவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தைப் பலாத்காரமாகக் கலைத்ததுதான் கிளர்ச்சிக்கு மூல காரணமாகும். இதனையொட்டி தொழிலாளர்களும், தங்கள் வாழ்க்கையும் வேலை நிலைமையும் சீர்திருந்த வேண்டுமெனக் கோரிக்கை எழுப்பி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 80 இலட்சமாக அதிகரித்துவிட்டது.

நிர்ப்பந்தமான நிலைமைகள் உருவாகிவிட்டதைத் தொடர்ந்து அதிபர் டி'கால், மாணவர் தலைவர்களுக்குப் பொது மன்னிப்பு அளிக்க முன்வந்துள்ளார்.

கொந்தளிப்பை மூட்டிய கிளர்ச்சியில் தண்டிக்கப்பட்ட அனைவருக்கும் பொது மன்னிப்புத் தரும் சட்டத்துக்கு டிகால் இசைவு தந்தார்.

குழப்பத்துக்கு ஒரு முடிவுகட்ட அதிபர் டிகால், பொதுமக்கள் வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்வந்திருக்கிறார்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டது!

பஞ்சாப் அரசின மனுமீது தலைமை நீதிமன்றத் தீர்ப்பு

புதுடில்லி, மே 21—

பஞ்சாப் மாநில அரசின் 1968-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத் தொடர்பாக இரண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்களும், 'அரசியல் சட்டத்துக்கு விரோதமானவை' என்று பஞ்சாப் — அரியானா உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பைச் செயல்படுத்தாது நிறுத்தி வைக்குமாறு தலைமை நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

இதற்கெனத் தனியாக அமைக்கப்பட்ட அரசியல் சட்ட விசாரணை மன்றம், மாநில அரசின் மனுவின்மீது இந்த ஆணையைப் பிறப்பித்தது.

மாநில அரசின் அப்பீல் விசாரணை முடியும்வரை இந்த ஆணை நடைமுறையில் இருக்கும். சூலை 15-ம் நாள் அப்பீல் மனு விசாரணைக்கு வரும்.

வழக்கறிஞர்கள் போராட்டம்

புதுடில்லி, மே 22—

டில்லி உயர் நீதி மன்றத்தை, மீண்டும் திருவாங்கூர் மாளிகைக்கு—அது பழுதுபார்க்கப்பட்டு முடிந்ததும்—மாற்ற அரசு உத்தேசித்திருப்பதாக அமைச்சர் ஜனார்த்தன ராவ் அறிவித்திருப்பதற்கு 480 வழக்கறிஞர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்குன்றனர்.

அரசின் இத்தகைய நடவடிக்கை எதுவானாலும் அதனைத் தாங்கள் எதிர்ப்பதாக, மாவட்ட நீதி மன்றம்—உயர் நீதி மன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் (வழக்கறிஞர் சங்க உறுப்பினர்கள்) கையெழுத்திட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றனர்.

உயிர்த் தியாகம் செய்ய முடிவு!

வேலையில்லாத பொறியர்கள் போராட்டம்!

போபால், மே 22—

தகுதி வாய்ந்த தொழில் நுணுக்க ஊழியர்களை நியமனம் செய்வதில் காட்டப்படும் பாரபட்சப் போக்கு கைவிடப்படவில்லையென்றால், முதலமைச்சரின் வீட்டுமுன் உயிர்த் தியாகம் செய்யப்போவதாக, மத்தியப் பிரதேசத்தில் வேலையில்லாது திண்டாடும் 24 பொறியர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த மாநிலத்திலுள்ள பொறியியல் பட்டம் (டிப்ளமோ) பெற்றவர்களின் கூட்டம் திரு. அக்னி சர்மா என்பவரின் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, பொறியர்களை நியமனம் செய்வதில் அமைச்சர்கள் தலையிட்டுச் செய்யும் நியமனம் முறையற்றது' என்றும், 'இத்தகைய முறைகேடான நியமனங்களெல்லாம் ரத்து செய்யப்படவேண்டும்' என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

புதுடில்லியில் இருட்டடிப்பு!

புதுடில்லி, மே 22—

டில்லி நகரில் வருகிற சனிக்கிழமையன்று இரவு 8 மணி முதல் 9 மணிவரை, சில குறிப்பிட்ட பகுதிகளில் 'இருட்டடிப்பு' ஒத்திகை நடைபெறும்.

வழக்கமாக நடந்துவரும் நகரப் பாதுகாப்பு ஒத்திகை நடவடிக்கையின் ஒரு கூறாகவே இது நடைபெறுகிறது என்று கூறப்படுகிறது.

இளம் முதலமைச்சர்

புதுடில்லியில் பதவியேற்பு

புதுடில்லி, மே 21—

அரியானாவின் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கும் பன்சிலால், இந்தியாவிலேயே இளம் முதல் வராவார்.

இன்று அவர், புதுடில்லியில் பதவி உறுதிமொழி ஏற்றார்.

ஒரு மாநிலத்தின் முதல்வர், புதுடில்லியில் பதவி உறுதிமொழி எடுத்துக்கொண்டது இதுவே முதல் தடவையாகும்.

நாடாளுமன்றக் கூட்டம்

புதுடில்லி, மே 22—

நாடாளுமன்ற மக்களவை—மேலவை ஆகியவைகளின் அடுத்த கூட்டத்தொடர் சூலை 22-ம் நாள் துவங்கி ஆகஸ்டு 30-ம் நாள் வரையில் நடைபெறும்.

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் காங்கிரசு ஆட்சியில் கொடுமை

அக்கிரமச் செயலுக்கு அமைச்சரும் உடந்தையாக இருப்பதா?

உண்மையை வெளியிட்ட பத்திரிகையாளர்மீது பாய்வானேன்?

ஆந்திர சம்பவம் குறித்து விவாதம்--மக்களவையில் இரா. செழியன் கண்டனம்

ஆந்திரப் பத்திரிகைச் செய்தியாளர்களுக்குத் தந்த பேட்டி ஒன்றில், ஆந்திர விவசாய அமைச்சர் திரு. திம்மா ரெட்டி அவர்கள், 'அரிசனங்கள், அடிபடவும் காலால் உதைபடவும் வேண்டியவர்கள்' என்று கூறியதாக 'பேட்ரியட்' என்ற பத்திரிகைச் செய்தியையொட்டி மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில், கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் கலந்துகொண்டு பேசியதாவது :—

அந்தக் கருத்துச் சரியானதல்ல!

"தாழ்த்தப்பட்ட மக்களை இழித்தும் பழித்தும் பேசியதாக ஆந்திர விவசாய அமைச்சர் திம்மா ரெட்டிமீது கண்டனம் தெரிவித்து எழுந்துள்ள விவாதத்தில், எனக்கு முன்னதாகப் பேசிய ஆந்திரத்தைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினர் திரு. நாராயண ராவ் அவர்கள், இந்த விவாதம் ஆந்திரத்தை எதிர்த்து—ஆந்திரர்களை எதிர்த்து இருப்பதாகக் கூறினார். 'அந்தக் கருத்து சரியல்ல' என்று முதலாவது விளக்கிட விரும்புகிறேன்.

திரு. திம்மா ரெட்டி கூறியதைப் பற்றி பிரச்சினை எழுந்ததே தவிர அவர், 'ஆந்திரர்' என்பதற்காக இந்தப் பிரச்சினை எழவில்லை.

திம்மா ரெட்டியைப் பற்றிப் பேசப்படுபவை ஆந்திரர்கள் அனைவரையும் எதிர்த்து அல்ல. எடுத்துக்காட்டாக கனம் உறுப்பினர் திரு. நாராயண ராவ் ஒரு நல்லவர்; அவரிடம் நாம் எதுவும் குறைகாணவில்லை.

அவமானப்பட வேண்டிய ஒன்று!

'அரிசனங்கள் உதைக்கப்பட வேண்டியவர்கள்—அடிக்கப்பட வேண்டியவர்கள்' என்று திரு. திம்மா ரெட்டி பேசியதாக 'பேட்ரியட்' பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்தது. இந்தச் செய்தியைப் படித்தவர்கள், இயல்பாக வெகுண்டனர்—கடும் தாக்குதலைத் தெரிவித்தனர்.

அவர் கூறியதாக வந்துள்ளது, தாழ்த்தப்பட்ட மக்களை அல்ல; இந்தியனாக உள்ள ஒவ்வொருவனையும் அவமானப்படுத்துவதாகும். அவ்வாறு கூறத்தக்க அளவுக்கு இந்தியாவின் நிலைமை இருப்பது குறித்து நாம் ஒவ்வொருவரும் அவமானப்பட வேண்டும்.

இதயத்தை வாட்டும் ஆதாரமல்லவா அது?

திம்மா ரெட்டி அவர்கள், 'நான் அவ்வாறு கூறவில்லை' என்று—அவர் பேட்டி தந்த பத்திரிகை நிருபர்களின் வாக்குமூலங்கள் நமக்குத் தரப்பட்டுள்ளன. ஆந்திர முதலமைச்சர் பிருமானந்த ரெட்டி அவற்றை வாங்கி நமது பரிசீலனைக்கு அனுப்பியுள்ளார்.

'பேட்ரியட்' பத்திரிகையில் வந்துள்ளபடி, 'அரிசனங்கள் உதைக்கப்படத்தக்கவர்கள் — அடிபடவேண்டியவர்கள்' என்ற செய்தி உண்மையா அல்லவா என்ற விவாதத்தில் நான் இறங்கப்போவதில்லை. 'அவ்வாறு சொல்லவில்லை' என்று திம்மா ரெட்டியார் மறுத்துள்ளார்.

பத்திரிகை நிருபர்களிடம் அவர் பேசியவை பற்றி முதலமைச்சர் பிருமானந்த ரெட்டி சேகரித்து அனுப்பியுள்ள இந்த ஆதாரங்களை மட்டும் வைத்து நாம் பார்க்கலாம்; இந்த ஆதாரங்களை யாரும் மறுக்கமாட்டார்கள். முதலமைச்சர் சேகரித்து அனுப்பியது; அதிகாரபூர்வமானது.

முதலமைச்சர் அனுப்பியுள்ள ஆதாரங்களைப் படித்தால், நிலைமை இன்னும் மோசமாக இருக்கிறது.

'அடிக்கவேண்டும்; காலால் உதைக்கவேண்டும்' என்பது வெறும் உடலுக்குத் தரும் துன்பம்; ஆனால் உள்ளத்தை வாட்டும் -- இதயத்தைச் சுடும் சொற்கள் பல இந்த ஆதாரங்களில் வெளிவந்துள்ளன!

அமைச்சரின் பேச்சு எந்த வகையானது?

இந்த ஆதாரங்களில், பத்திரிகை நிருபர் திரு. இராமாராவ் என்பவர் தந்த வாக்குமூலத்தைப் பாருங்கள்; 'அவர் நீண்டகால அனுபவமும் நேர்மையும் உடைய பத்திரிகை நிருபர்' என்று எனக்கு முன்பு ஒரு உறுப்பினர் வர்ணித்தார். அப்படிப்பட்ட நிருபர் என்ன கூறுகிறார் என்று கவனிக்கலாம்.

தர்க்க முறையில் ஒன்றைப்பற்றி நேரடியாகக் கூறாமல் சற்று வளைத்துக்கூட கூறலாம்; 'அ' என்பது 'ஆ'-வுக்குச் சமம்; 'ஆ' என்பது 'இ'-க்குச் சமம் என்று கூறினால், 'அ' என்பது 'இ'-க்குச் சமம் என்று நாமாகத் தெரிந்துகொள்ளலாம். திம்மா ரெட்டியின் பேச்சு இந்த வகையில் அமைந்துள்ளது.

பரிதாபப்படும் வார்த்தை ஏதேனும் உண்டா?

திம்மா ரெட்டி கூறியதை திரு. நாராயண ராவ் கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தில் தந்துள்ளார்.

"கிராமங்களில் களவுகள் நடைபெறுவதும், திருடியவர்களைக் கையும் களவுமாகப் பிடித்தால் செம்மையாக உதைப்பதும் சர்வ சாதாரணம்."

இவ்வாறு கூறிய அமைச்சர் திம்மா ரெட்டி அடுத்துக் கூறுகிறார் :—

"பெரும்பான்மையினராக இருக்கும் அரிசனங்கள் ஏழைகளாக இருப்பதால், திருடுவதில் ஈடுபட்டு, அகப்பட்டுக்கொள்கிறார்கள்."

இந்த இரண்டும், அமைச்சர் திம்மா ரெட்டி கூறியவை; பத்திரிகை நிருபரால் ஒப்பிக்கப்பட்டு, முதலமைச்சர் பிருமானந்த ரெட்டியால் நமக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அமைச்சர் திம்மா ரெட்டி என்ன கூறுகிறார் :—

"திருடுபவர்கள் உதைக்கப்படுவது சர்வ சாதாரணம்; அரிசனங்கள் பொதுவாகத் திருடுபவர்கள்."

இரண்டையும் இணைத்துப் பார்த்தால் என்ன கிடைக்கிறது?

"அரிசனங்கள் திருடர்களாதலால், உதைக்கப்பட வேண்டியதுதான்—அடிபட வேண்டியதுதான்.....

(காங்கிரசு உறுப்பினர்கள் சிலர் குறுக்கிட்டனர்)

அவைத் தலைவர் :—"குறுக்கீடுகள் வேண்டாம். கனம் உறுப்பினர் (இரா. செழியன்), கொடுக்கப்பட்ட ஆதாரங்களிலிருந்து பேசுகிறார். அதிலிருந்து தர்க்க ரீதியாக முடிவு காட்டுவது அவர் உரிமை."

இரா. செழியன் :— "அவைத் தலைவர் அவர்களே! ஆந்திர மாநிலத்திலுள்ள ஒரு சிற்றூரில் ஓர் அரிசன இளைஞர் கட்டி வைக்கப்பட்டு— தீயிடப்பட்டு— உயிரோடு எரிக்கப்பட்ட கோரச் சம்பவம் நடைபெற்றது. அந்தச் சம்பவம் நடைபெற்ற பிறகு, பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி தந்த அமைச்சர் திம்மா ரெட்டி, அந்தக் கோரக் கொலையைக் கண்டித்தோ, கொடும் பாதகத்துக்கு ஆளான அரிசன இளைஞன்மீது பரிதாபப்பட்டோ ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை! நடைபெற்றதற்குச் சமாதானம் கூறுவது போலிருக்கிறது—அமைச்சரின் பேச்சு! அவர் கூறுகிறார் :—

"பயிர்த் தொழிலில் மிராசுதாரர்கள் ஏராளமாக முதல் போடுகிறார்கள்; அவர்களுடைய சாமான்கள் காணாமற் போனால் சும்மா இருப்பார்களா? திருடர்களைப் பிடித்தால் தண்டனை தராமல் விடுவீர்களா? அப்படியில்லாமல், 'முத்தம் கொடுத்துக் கொஞ்சுவார்கள்' என்று எதிர்பார்க்க முடியுமா?"

[காங்கிரசு உறுப்பினர்கள் குறுக்கீடு]

அவைத் தலைவர் :— "ஆதாரங்கள் எல்லோருக்கும் தரப்பட்டுள்ளன; அவற்றிலிருந்து கனம் உறுப்பினர் சிலவற்றை எடுத்துக்காட்டுகிறார். அவர் உரிமையில் குறுக்கிடக்கூடாது; நேரத்தையும் வீணாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்."

இரா. செழியன் :—"முதலமைச்சர் சேகரித்துத் தந்துள்ள ஆதாரங்களை விட்டு, நான் ஒன்றும் அதிகமாகச் சொல்லவில்லை.

பத்திரிகை நிருபர்களையும் மிரட்டுவதா அமைச்சர்?

அரிசனங்களை மட்டுமல்ல; பத்திரிகை நிருபர்களையும் கனம் அமைச்சர் மிரட்டியிருக்கிறார்.

பத்திரிகை நிருபர்களைப் பார்த்து அமைச்சர் சொல்லியிருக்கிறார் :—

"அடிக்கப்பட்டவன், எரிக்கப்பட்டவன் என்ன சாதி என்று குறிப்பிட்டு எழுதி, அதைப் பெரிதுபடுத்திவிட்டீர்கள்!

"சர்வ சாதாரணமாக நடக்கக்கூடியவைகளை நீங்கள் பெரிதாக்கிவிடுகிறீர்கள்!

"சாதியைக் குறிப்பிட்டுக் காட்டுகிற பத்திரிகை நிருபர்களை செம்மையாக உதைக்க வேண்டும்."

அமைச்சர் இவ்வளவு கடுங்கோபத்துடன் கூறுவதற்கு பத்திரிகை நிருபர்கள் என்ன குற்றம் செய்துவிட்டார்கள் என்று பார்த்தால், ஓர் அரிசன இளைஞர் தீயிலிட்டு எரிக்கப்பட்ட செய்தியை அவர்கள் வெளியிட்டுவிட்டார்கள் — அதுதான்! அவ்வளவு கோபம் வருகிறது அவருக்கு!

நடந்த சம்பவம் அவருக்குக் கோபத்தை உண்டாக்கவில்லை— 'அதை வெளியிட்டுவிட்டார்களே' என்றுதான் கோபம் வருகிறது!

அமைச்சர் திம்மா ரெட்டி அவர்கள் இதற்குமுன்பு தந்த எச்சரிக்கை பற்றி ஒரு பத்திரிகை நிருபர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் குறிப்பும் முதலமைச்சர் பிருமானந்த ரெட்டி தந்த ஆதாரத்தில் அடங்கியுள்ளது :—

"திரு. இராமா ராவ் என்ற பத்திரிகை நிருபர்-மூன்றாண்டுகளுக்கு முன்பு—திம்மா ரெட்டி அவர்கள் ஆந்திரப் பிரதேசக் காங்கிரசுத் தலைவராக இருந்த பொழுது தம்மிடம் திரு. சீதாராம் என்ற நிருபர் பற்றி எச்சரித்ததை வெளியிட்டார். ஆந்திரப் பத்திரிகைகளில், தம்மைப்பற்றி சீதாராம் கண்டித்து எழுதுவதாகவும், இதைப்போலத் தொடர்ந்து சீதாராம் எழுதி வந்தால், 'சென்னையில் இலட்சுமிகாந்தனுக்கு நேர்ந்த கதி இவனுக்கும் நேரும்' என்று திம்மா ரெட்டி எச்சரித்தார்.

இலட்சுமிகாந்தம் பற்றிய குறிப்பு இங்கு பலருக்குப் புரியாமலிருக்கலாம். இலட்சுமிகாந்தம் சென்னையில் ஒரு பத்திரிகை ஆசிரியராக இருந்தார்; பத்திரிகை என்றால்—தரக்குறைவான ஒரு மஞ்சள் பத்திரிகை அது! அந்த இலட்சுமிகாந்தம், ஒரு நாள் கொலை செய்யப்பட்டார்.

'அதைப்போல் நேரிடும்' என்றால் என்ன அர்த்தம்? அமைச்சருக்குப் பிடிக்காததை எழுதினால், நிருபர் கொலை செய்யப்படுவார்! அவ்வளவுதான்!

மனச்சாட்சியே பதில் சொல்லட்டும்!

திம்மா ரெட்டி கூறியதைப் பற்றி விவாதிக்கும்பொழுது, மாநில அமைச்சர் சொன்னதைப் பற்றியோ, செய்ததைப் பற்றியோ இந்த அவை, 'ஒரு முடிவு எடுத்துச் செயல்பட முனவர வேண்டும்' என்று நான் கூறவில்லை. மாநில வரம்பில் மத்திய அரசு தலையிட வேண்டாம். இந்த விவகாரத்தில், 'அமைச்சர் கூறியது சரியா தவறா' என்ற கேள்விக்கான விடையையும், அதற்கான நடவடிக்கை பற்றியும் முடிவெடுக்க நாம் ஈடுபட வேண்டாம். அதை மாநில முதலமைச்சரின் மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறேன்; ஆந்திர மக்கள் மட்டுமல்ல—இந்திய மக்கள் அனைவரும், 'மனச்சாட்சிப்படி கவனிக்கட்டும்' என விட்டுவிடுகிறேன்; மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்களின் மனச்சாட்சிக்கு விட்டுவிடுகிறேன்; காங்கிரசுக்காரர்களின் மனச்சாட்சிக்கு—அவர்களில் ஒரு சிலராவது இன்னமும் காந்தியடிகளில் அறநெறியைப் பின்பற்றுகிறவர்கள் என்ற நினைப்பில்—அவர்கள் மனச்சாட்சிக்கு இதை விட்டுவைக்கிறேன்."

இருதய நோயை அறியப் புதிய கருவி!

பிறந்த குழந்தைக்கு இருதய நோய், இருதயக் கோளாறு ஏதேனும் இருக்கிறதா?—சின்னஞ்சிறு குழந்தைகளுக்கு இருதய நோய் இருக்கிறதா — என்பதை, கணக்கிடும் பொறி ஒன்று கண்டுபிடித்துவிடும்!

விஞ்ஞானத்திலும் தொழிலிலும், கணக்கிடும் பொறிகள் வியப்பூட்டும் வகையிலே திறமையாகப் பணியாற்றுகின்றன!

மின்விசை மூலம் இருதயத் துடிப்பைப் பதிவு செய்யும் கருவி (எலெக்ட்ரோ கார்டியகிராம்—இ. சி. ஜி.) பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பெற்று வந்துள்ளது; ஆனால் குழந்தைகளைப் பொறுத்த மட்டில் இது அவ்வளவு பயன்தரக் கூடியதாக இல்லை; இதற்குக் காரணம், குழந்தைகளிடம் இ. சி. ஜி. எடுப்பது மிகக் கடினம்;; அதிக நேரமும் அதிக முயற்சியும் தேவைப்படுகின்றன.

அன்றியும், இருதய நோயுள்ள ஒரு குழந்தையின் இ. சி ஜி பதிவுகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு வேண்டிய சரியான இ. சி. ஜி. பதிவுகளை அமைக்கவே பலப்பல இ. சி. ஜி. பதிவுகள் எடுக்க வேண்டியிருக்கின்றன. எனவே, இந்த முயற்சியில் தலையிட பல டாக்டர்கள் தயங்குகின்றனர்.

நல்ல உடல் நலத்துடன் இருக்கும் குழந்தையின் இ. சி. ஜி. என்னவென்பதைத் துல்லியமாக வரைந்திட உதவி செய்யும்—புதிய கணக்கிடும் பொறி! இதில்தான் இருக்கிறது இதனுடைய பெரும் பயன்!

மாநிலங்களுக்கு எந்த அடிப்படையில் மத்திய உதவி?

முதலமைச்சர்கள் கூடி விவாதிப்பர்

புதிய வரி விதிப்புக்கு மாநிலங்கள் எதிர்ப்பு--- செய்தியாளரிடை முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, மே 20—

"நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல்வேறு மாநிலங்களின் திட்டங்களையும் சேர்ப்பது குறித்து, மாநில முதலமைச்சர்கள் அடுத்த மாதம் டெல்லியில் கூடி விவாதிப்பார்கள்"

என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

"மாநிலங்கட்கு மத்திய அரசின் உதவி எந்த அடிப்படையில் இருக்கவேண்டும் என்பது பற்றியும் அப்போது விவாதிக்கப்படும்" என்றார் அண்ணா.

இன்னான துறைகட்கு இவ்வளவு என்று நிதியை ஒதுக்குவதற்குப் பதிலாக மாநிலத்துக்கு இவ்வளவு என்று மொத்தமாக நிதியை ஒதுக்கிவிட்டு, அதை மாநிலங்கள் தங்கள் விருப்பம்போல் செலவழிக்க விட்டுவிட வேண்டும் என்று தாம் வற்புறுத்தியதாகவும், மற்ற முதலமைச்சர்கள் இக்கருத்தை எதிர்க்காததால் ஆதரிப்பதாகத்தான் பொருள் என்றும் அண்ணா அவர்கள் தெரிவித்தார்கள்; 'இது பற்றியும் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் விவாதிக்கப்படும்' என்றார்.

அண்ணா அவர்கள் மேலும் தெரிவித்ததாவது :—

"மக்கட் தொகை அடிப்படையில் நிதி ஒதுக்கவேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது. 'ஒரு மாநிலத்தில் நல்ல சாலை வசதிகளும், கல்வி நிறுவனங்களும் இருந்தால் அந்த மாநிலம் முன்னேற்றமடைந்துவிட்டதாகக் கருதி அதற்கு நிதியுதவியைக் குறைப்பது கூடாது' என்று வற்புறுத்தியிருக்கிறேன். இந்த இரண்டு வசதிகளும் புதிதாக அமையும் போதுதான் இலாபகரமாக இருக்கும். அதன் பிறகு இவற்றைப் பராமரிக்கப் பணம் தேவைப்படும்போது பெரும் சுமையாகவே இருக்கும்.

மேற்கொண்டு புதிய நிதி வசதிகளைத் திரட்ட வேண்டும் என்பதை மகாராட்டிரம் தவிர மற்ற எல்லா மாநிலங்களும் ஒப்புக்கொண்டன.

மகாராட்டிரம் மட்டும், மத்திய அரசு விருப்பப்படி நடக்கத் தயாராகயிருக்கிறது.

நான்காம் திட்ட காலத்தில் புதிய வரி விதிக்க எந்த மாநிலமும் தயாராயில்லை. இருக்கின்ற வசதியைக் கொண்டும், மத்திய அரசின் செலவினங்களைக் குறைப்பதன் மூலமும் எந்த அளவுக்கு நிதி வசதியைத் திரட்ட முடியுமோ அந்த அளவுக்கு முயற்சி செய்ய வேண்டும்."

சுப்பிரமணிய வாதம்!

"நம் நாட்டில் இரண்டு ஆண்டு சரியான மழை இல்லாததன் காரணமாக உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. மழை சில காலம் நன்றாகப் பெய்யும்; சில காலம் மழை இருக்காது. 100 ஆண்டு காலத்தில் இந்த இரண்டு ஆண்டுக் காலம் மாதிரி மழை பெய்யாமலிருந்ததில்லை. முன்பு மழை இல்லாமல் பஞ்சம் ஏற்பட்டபொழுது ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியாகச் செத்தார்கள். அப்படியில்லாமல் இப்பொழுது மழை இல்லாதபோது ஒருவரையும் பட்டினியால் சாகவிடவில்லை. அமெரிக்காவிலிருந்து கோதுமை வரவழைத்து உணவுப் பஞ்சத்தைத் தவிர்த்தோம்."

—சி. சுப்பிரமணியம்

'அவர்கள்' நாளிதழ் : 14-5-68

'பொறுப்பான பதவிகளில் இருந்தவராயிற்றே சுப்பிரமணியம்—எதையும் முறையாகப் பொறுப்போடு பேசுவார்' என்றுதானே எதிர்பார்த்தோம்! உம்ம்.....என்றைக்கு அவர் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகப் பொறுப்பேற்றாரோ, அன்றே தொடங்கி விட்டது பொருளற்ற 'சுப்பிரமணிய வாதம்!'

காங்கிரசாட்சிக் காலத்திலே மட்டுந்தான் மழை பெய்யவில்லை என்றும், தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதும் 1967—68-ல் மாதம் மும்மாரி மழை பொழிந்தது போலவும் பேசியிருக்கும் சுப்பிரமணியனாருக்கு—கையாலாகாத காங்கிரசுக் காரருக்கு அவர் சொல்லட்டும் என்பதற்காக—சட்டமன்றத்தில் நிதி நிலை அறிக்கையை வைத்து 28—2 68-ம் நாள் பேரறிஞர்—முதல்வர் அண்ணா அவர்கள் ஆற்றிய விளக்கவுரையின் பகுதியைக் கீழே தருகிறோம் :—

"உணவுத் தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள உயர்வு, நல்ல பருவநிலை காரணமாக மட்டும் ஏற்பட்ட உயர்வல்ல என்பதை நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

"புள்ளிவிவரங்களைப் பாகுபடுத்திப் பார்த்ததிலிருந்து, நமது மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவ மழையினால்—முந்திய ஆண்டில் 416 மில்லிமீட்டர் மழையும், 1965—66-ல் 315 மிலலிமீட்டர் மழையும் பெய்ததற்கு மாறாக—இவ்வாண்டு சராசரி 289 மில்லிமீட்டர் மழையே பெய்துள்ளது எனத் தெரியவருகிறது.

"1965—66-ம் ஆண்டில், நமது மாநிலத்தில் என்றுமே கண்டிராத அளவில் வறட்சி நிலை ஏற்பட்டது என்று பொதுவாகக் கருதப்படுவதை இங்கே நினைவுறுத்த விரும்புகின்றேன்.

"நடப்புப் பசலி ஆண்டில் பெய்த மழையின் அளவு, இதற்கு முந்திய ஆண்டுகளின் அளவைக் காட்டிலும் மிகக் குறைந்திருந்தது. இக்குறைவு, 1966—67-ம் ஆண்டோடு ஒப்பிடும் போது 30.5 சதவிகிதமும், 1965—66-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது 8·2 சதவிகிதமுமாக இருந்தது.

"இங்ஙனமே, வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டது. 1966—67-ல் 606 மில்லிமீட்டர் மழை பெய்திருக்க, 1967—68-ல் சராசரி 496 மில்லிமீட்டர் அளவிற்கே மழை பெய்துள்ளது. இதனால் ஏற்பட்ட குறைவு, 18·1 சதவிகிதமாகும்.

"இவ்விரு மழைக் காலங்களையும் இணைத்துப் பார்த்தோமேயானால், நடப்பாண்டின் மழை அளவு, 1966 - 67-ம் ஆண்டின் மழை அளவைக் காட்டிலும் 23·1 சதவிகிதம் குறைந்துள்ளது தெரியவரும்.

"இந்த இரண்டு பருவங்களிலும் ஆங்காங்கு பெய்த மழை அளவை மேலும் கூர்ந்து ஆய்வு செய்வோமானால், பருவ மழை மேலும் பாதகமாயிருந்திருப்பதை அறியலாம்.

"1966—67-ல் 48 நாட்களும், 1965 - 66-ல் 41 நாட்களும் மழை பெயதிருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில், மொத்தம் 39 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது.

"வடகிழக்குப் பருவ மழையும், பயிர் வளரும் காலமும் இணைந்து செல்லும் இந்தக் கால அளவில், 1966-67-ல் 24 நாட்களும், 1965 66-ல் 22 நாட்களும் மழை பெயதிருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில் 18 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது.

"எனவே, பயிர்கள் வளரும் முக்கிய தருவாயில் பெய்த மழை அளவு, பெருமளவிற்குப் பற்றாக்குறையாகவே இருந்தது. பெரிய பாசன நீர்த் தேக்கங்களின் நீர்மட்டமும், நெஞ்சம் மகிழும் அளவிலே அவ்வளவு நிறைவு அளிப்பதாகவில்லை.

"இத்தகைய இடையூறான பருவ நிலைகள் வாய்த்தபோதிலும், நடப்பாண்டில் உணவுத் தானிய உற்பத்தி, 1966—67-ம் ஆண்டின் உற்பத்திக்குமேல் 2 இலடசம் டன் உயர்ந்து, ஏறக்குறைய 60 இலட்சம் டன் அளவில் நிற்குமென்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். நடப்பாண்டில், பொதுவாக, '1965—66-க்கு நேர் என்று சொல்லத்தக்க பருவ நிலை அமைந்துள்ளது. அவ்வாறு 1965—66-உடன் ஒப்பிட்டு நோக்கின், நடப்பாண்டின் உற்பத்தி 7.4 இலட்சம் டன் உயர்ந்திருக்கிறது. 'இந்த உற்பத்தி உயர்வு, நடப்பாண்டில் அரசு மேற்கொண்டுள்ள குறிப்பான திட்டங்களின் வாயிலாகக் கிட்டியுள்ள பலன்களை, முற்ற எடுத்துக்காட்டுகிறது' என்று சொன்னால் அது மிகையாகாது,"

இதற்கும் பிறகு திருவாளர் சுப்பிரமணியம் இத்தகைய அற்பத்தனமான வாதங்களில் இறங்குவது பண்பு ஆகாது!

புதுவையை தமிழகத்துடன் இணைக்க வேண்டும்

நாடாளுமன்ற மேலவையில் தில்லை வில்லாளன் வற்புறுத்தல்

நாடாளுமன்ற மேலவையில், புதுவை சட்ட நீடிப்புப்பற்றிய விவாதத்தில் கழக உறுப்பினர் தோழர் தில்லை வில்லாளன் முதன் முறையாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது :—

"புதுவை மாநிலத்தில் இந்தியச் சட்டங்கள் அனைத்தும் உடனடியாகச் செயல்படுத்தப்பட வேண்டும்; சட்டம் ஒன்றாக அமைத்தாலே ஒருமைப்பாடு ஏற்படும்.

"புதுவை மாநிலம் அண்மையிலுள்ள மாநிலங்களுடன் இணைந்திடவேண்டும்."

காமன்வெல்த் மகளிர் மாநாடு

இந்தியா கலந்து கொண்டது

இலண்டன், மே 21—

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மகளிர் எந்த வகையில் உதவமுடியும் என்பது பற்றி விவாதிக்கும் மகளிர் மாநாடு ஒன்று, இன்றுமுதல் இலண்டனில் நடைபெறுகிறது.

காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த 100 பேர் பங்குகொள்ளும் இந்த விவாதத்தில், இந்தியாவும் கலந்துகொள்கிறது.

இலண்டனில் உள்ள ஒரு மகளிர் சங்கம், வெளிநாட்டு வளர்ச்சிப் பணி அமைச்சகத்தின் உதவியுடன் இம்மாநாட்டிற்கு ஏற்பாடு செய்துள்ளது. காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த மகளிரிடையே நட்புறவையும், நல்லெண்ணத்தையும் வளர்ப்பது இந்த சங்கத்தின் நோக்கமாகும்.

தமிழக மின் குழு

விளம்பர அறிக்கை

கீழ்க்காணும் பொருள்கள் சப்ளை செய்வதற்கு ஸ்பெசிபிகேஷனில் கண்டுள்ள முடிவு தேதிக்குமுன் கீழே ஒப்பமிடப்பட்டுள்ளவரால் அரக்கு முத்திரையிட்ட டெண்டர்கள் வரவேற்கப்படுகின்றன.

டெண்டர் விதிகள் அடங்கிய ஒவ்வொன்றுக்கும் கீழே குறிக்கப்பட்டுள்ளபடி எம்.ஓ. மூலமாகவோ அல்லது ரொக்கமாகவோ, 'அக்கவுண்ட்ஸ் ஆபீசர், பைக்காரா மின் திட்டம், கோயமுத்தூர்-12' அவர்களிடம் செலுத்தி விண்ணப்பப் பாரங்கள் பெற்றுக் கொள்ளலாம். மேற்படி தொகை எந்தக் காரணத்தைக் கொண்டும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

தபால் போக்குவரத்தில் ஏற்படும் தவறுக்கு, தமிழக மின் குழு எந்தவிதப் பொறுப்பும் ஏற்காது.

டெண்டர் பாரங்களுக்கு விண்ணப்பிக்கையில், ஸ்பெசிபிகேஷன் எண், டெண்டர் விலை செலுத்தியதற்கான இரசீது எண் முதலியவற்றைத் தவறாது எழுதி அனுப்ப வேண்டும். மேற்படி டெண்டர் பாரங்கள் பிறருக்கு மாற்றிக்கொள்ளத்தக்கதல்ல.

டெண்டர்கள் குறிப்பிட்ட முடிவு தேதியன்று மாலை 4·00 மணி அளவில் பரிசீலிக்கப்படுகையில் நேரில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் கலந்துகொள்ளலாம்.

வரிசை எண்	ஸ்பெசிபிகேஷன்	பொருள்	டேவணித் தொகை	ஸ்பெசிபிகேஷன் விலை	முடிவு தேதி
1. O.T.	2/68-69	தேக்கு மர மீட்டர் போர்டுகள் 18"×12"×5/8" (450×300×16 மி மீ.)	ரூ. 750	ரூ. 1·03	10-6-68
2. O.T.	3/68-69	தேக்கு மர மீட்டர் போர்டுகள் 14"×20"×5/8" (350×500×16 மி.மீ)	750	1·03	"
3. O.T.	4/68-69	தேக்கு மர மீட்டர் போர்டுகள் 10"×4"×½" (250×100×12 மி மீ.)	200	1·03	"
4. O.T.	5/68-69	கலாய் வளைவுகள் (G. I Bends) ¾", 1", 2"	750	1·03	11-6-68
5. O.T.	6/68-69	கலாய் வளைவுகள் (G. I. Bends) 1½", 2½", 3"	750	1·03	"
6. O.T.	7/68-69	இருஉலோகப்பிடிப்புகள் (Bimetallic clamps) பலவித ரகங்கள்	500	5·15	"
7. O.T	8/68-69	பாறைகளில் உடைக்கப்பட்ட நல்ல தரமான நீல நிற (granite) ஜல்லிக் கற்கள் அளவு ½ அங்குலம் முதல் ¾ அங்குலம் வரை	375	1·03	12-6-68

இடம் : கோயமுத்தூர்

மேற்பார்வைப் பொறியாளர்,
பைகாரா மின் திட்டம்,
டாடாபாத், கோயமுத்தூர்-12

'பணத்தையும் சேர்த்து மக்களின் மனத்தையும் பிரதிபலிக்க வேண்டும்'

சிறுசேமிப்பு ஏஜெண்டுகள் பணி பற்றி எம். ஜி. ஆர்.

பயிற்சி முகாம் துவக்கவிழா சிறப்புச் சொற்பொழிவு

சென்னை, மே 22—

"பணம் சேர்த்துக் கொடுப்பதோடு உங்களுடைய கடமை முடிந்துவிடவில்லை; உங்களுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது; பணத்தைச் சேர்த்துக் கொடுப்பவர்களாக மட்டுமன்றி, மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பவர்களாகவும் நீங்கள் இருக்கவேண்டும்.

"நீங்கள் பல நண்பர்களைச் சந்திககிறீர்கள்; ஏழைகளைச் சந்திக்கலாம்—நடுத்தர வகுப்பினரைச் சந்திக்கலாம்—உழைப்பாளர்களையும், தொழிலாளர்களையும், வேலையில்லாதவர்களையும் சந்திக்கலாம்; அவர்கள் எண்ணங்களெல்லாம் உங்களுக்குத் தெரியும்; தேவைகளெல்லாம் உங்களுக்குத் தெரியும்.

"ஐந்து ரூபாயைச் சேமிப்பில் போடும்போது, எந்த ஆசையை மனத்தில் வைத்துப் பணம் போடுகிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அவர்களுடைய நினைவுகளையும், ஆசைகலையும் நீங்கள் எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

"'சிறு சேமிப்பிற்கும்—இதற்கும் என்ன சம்பந்தம்' என்று கேட்காதீர்கள்; இது, நாட்டிற்கும் நமக்கும் தேவையான ஒன்று. வெறும் ஏஜெண்டுகளாக இருப்பதோடு உங்கள் பணி தீரவில்லை; 'நாடடிற்கு இது தேவை' என்று மக்களின் மனத்தை பிரதிபலிப்பீர்களானால், அதை நாங்கள் அரசுக்குத் தெரிவிப்போம்.

"வேலையில்லாத் திண்டாட்டத்திலிருப்பவர்களுக்கு — வேலை தேடித் திரிபவர்களுக்குப் பலன் அளிக்கும் வகையில் திட்டம் தீட்ட நீங்கள் பயன்பட வேண்டும்"

என்று, சிறுசேமிப்பு ஏஜெண்டுகளை, மாநில சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சிறு சேமிப்பு ஏஜெண்டுகள் பயிற்சி முகாமில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது :—

"யார் எந்த நிலையில் உங்களைக் கருதினாலும், வெறும் இலாபத்தை மனத்தில் கொள்ளாமல் தியாக உணர்வுடன் நீங்கள் செயல்பட்டு வருகிறீர்கள்.

இலாபம் ஒன்றையே கருதிச் செயல்பட்டால் அதில் ஓர் எல்லையே இருக்கமுடியாது. ஆயிரம் ரூபாய் மாதம் சம்பாதிப்பவருக்கு, 'இன்னும் கொஞ்சம் கிடைக்காதா' என்று தோன்றும்; இலட்ச ரூபாய் வாங்குகிறவருக்கு, 'இன்னும் ஒரு 50 ஆயிரம் கிடைக்காதா' என்று ஆசை ஏற்படும்.

எனவே, இலாபத்தை மனத்தில் கொள்ளாமல், நம்மால் முடிந்த வரை நாட்டிற்காகவும், நாட்டு வளமைக்காகவும் செயல்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

'எல்லைக்கோடு' என்பது நமக்கு ஓர் நிர்ணயமா?

நாடு இருக்கிற நிலையில் பணம் சேர்த்துக் கொடுப்பது இலகுவான சாரியம் அல்ல. அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான நிலையில் நாம் வேலை செய்கிறோம். எனவே, நம்முடைய நினைப்பில் ஒரு முடிவை நாம் ஏற்படுத்திக் கொள்வது நல்லதென்று நான் கருதுகிறேன்.

ஏஜெண்டுகளின் பொறுப்பும் கடமையும் என்ன? 'இந்த அளவுக்குப் பணம் சேர்த்துக் கொடுத்துவிட்டோம்' என்று முற்றுப் புள்ளி வைக்கப் போகிறோமா—இல்லை—'நாம் சேர்த்திருக்கிற பணம் நாட்டிற்கு இந்தப் பலன் எய்தவேண்டும்' என்ற எல்லைக் கோட்டை வைத்திருக்கிறோமா? அவ்வாறு ஓர் ஆசைக்

(4-5 பக்கம் பார்க்க)

மாவட்டத் தலைநகராகக் காஞ்சிபுரம்

அண்ணு தலைமையில் விழா

அமைச்சர் கே. ஏ. மதியழகன் அறிவிப்பு

சென்னை, மே 22—

சூலை 1-ம் நாள் முதல் காஞ்சிபுரம், செங்கற்பட்டு மாவட்டத்தின் தலைநகராகிறது; அன்று முதல் மாவட்டக் கலெக்டர் அலுவலகமும், போலீசு கண்காணிப்பாளர் அலுவலகமும் காஞ்சிபுரத்தில் பணியாற்றத் தொடங்கும்.

சூலை 1-ம் நாளன்று முதலமைச்சர் அண்ணு அவர்கள், இந்தப் புதிய ஏற்பாட்டை, முறைப்படி துவக்கிவைப்பார்.

தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களை தலைமையில் 90 நிமிட நேரம் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றிய முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன. இக்கூட்டத்தில் அமைச்சர் கே. ஏ. மதியழகன், மற்றும் சம்பந்தப்பட்ட இலாகாக்களின் உயரதர அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

"தலைநகர் மாற்றம் தவிர, மற்ற படி மாவட்ட நிர்வாக அமைப்பில் எவ்விதமான மாறுதலும் இருக்காது"

என்று செய்தியாளர்களிடம் தெரிவித்த அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், இதுபற்றி மேலும் தெரிவித்திருப்பதாவது :—

"தற்போது சைதாப்பேட்டையில் செங்கற்பட்டு மாவட்டக் கலெக்டர் அலுவலகம் இருக்கிறது; மாவட்டத் தலைமைப் போலீசு அலுவலகம் பறங்கி மலையில் இருக்கிறது; இந்த இரு அலுவலகங்களும்—தலைநகர் மாற்றத் திற்குப்பின்—காஞ்சிபுரத்துக்கு மாற்றப்படும்.

சென்னையைச் சுற்றி செங்கற்பட்டு மாவட்டக் கல்லூரைப் பகுதிகளாக உள்ள எண்ணூர், திருவொற்றியூர், அம்பத்தூர், ஆவடி போன்ற தொழிற் சாலைப் பகுதிகளுக்கொன்று தனியாக ஒரு போலீசு சூப்பிரண்டெண்டு நியமிக்கப்படுவார்; இப்பகுதிகளில் சட்டம்—அமைதியைப் பாதுகாக்கும் பொறுப்பு அந்தப் போலீசு அதிகாரியிடம் ஒப் படைக்கப்படும்; அவர், 'சென்கற்பட்டு கிழக்கு மாவட்டப் போலீசுத் தலைமை அதிகாரி' என அழைக்கப்படுவார்; அவரது அலுவலகம், பறங்கி மலையில் இருக்கும்.

செங்கற்பட்டு மாவட்டப் புதிய தலைநகராள காஞ்சிபுரத்தில், மற்றொரு போலீசு அதிகாரியின் அலுவலகம் இருக்கும்; அவருக்கு, 'செங்கற்பட்டு மேற்கு மாவட்டத் தலைமைப் போலீசு அதிகாரி' எனப் பெயர் இருக்கும்.

காஞ்சிபுரத்திலுள்ள கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிக் கட்டிடத்தில் மாவட்டக் கலெக்டர் அலுவலக மும், கூட்டுறவு மத்திய பாங்கியின் கட்டிடத்தில் மாவட்டப் போலீசு அதிகாரியின் அலுவலகமும் தற்காலிகமாக இருக்கும்.

மாவட்டக் கலெக்டருக்கும், மேற்கு மாவட்டப் போலீசு அதிகாரிக்கும் தற்காலிகமாக வாலாஜாபாத்தில் வீடுகள் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப் படும்.

மாவட்டக் கலெக்டர், போலீசு அதிகாரி ஆகியோரின் அலுவலகங்கள்—அவர்கள் குடியிருக்கும் பங்களாக்களுடன் இணைக்கப்படும் அளவில்—18 திங்களுக்குள் கட்டி முடிக்கப்படும்.

கலெக்டர், போலீசு அதிகாரி அலுவலங்களோடு சேர்ந்த சுமார் 300 ஊழியர்களுக்காகக் குறைந்த வருமானம் பிரிவு வீடுகள் 240 கட்டுமானு குடியிருப்பு வசதிக் கழகம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வீடுகள், 8-லிருந்து 10-மாதங்களுக்குள் கட்டி முடிக்கப்படும்.

இங்கத் கட்டிடங்களுக்கான இடமும் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. காஞ்சிபுரம் அருகில் வேகவதி ஆற்றங்கரும — பாலாற்றுக்கும் இடையில் இதற்குப் போதிய இடம் கிடைக்கும் என்று கூறப் படுகிறது.

சென்னைக்கும் — காஞ்சிபுரத்திற்கு மிடையில் அலுவலக ஊழியர்கள் செல்வதற்கு வசதியாக இரயில் விமானு இரயிலே அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

பறங்கிமலையிலிருந்து ஆயுதப் போலீசுப் பிரிவுளில் சிலவற்றைக் காஞ்சிபுரத்துக்கு மாற்றுவதென முன்பு முடிவு செய்யப் பட்டிருந்தது; ஆனால், எல்லாப் பிரிவுகளும் பறங்கிமலையிலேயே நீடித்து வருவதென இப்போது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

"பழைய முடிவுகளிலிருந்து இப்போது செய்யப்பட்டுள்ள மாறுதல்கள், தலைகர் மாற்றத்தில் ஏற்படக்கூடிய செலவையும் நேரத்தையும் குறைப்பதற்கு உதவும்."

இந்திரா காந்திக்கு

ஆடம்பர விருந்து

கான்பெர்ரா, மே 22—

ஆஸ்திரேலியத் தலைநகரான கான் பெர் ரா வில், இந்தியத் தலைமையமைச்சர் திருமதி இந்திரா காந்திக்கு (இன்று) அளிக்கப் படவிருக்கும் இரண்டு மணி நேர விருந்துபசாரத்திற்காக ஆஸ்திரேலிய அரசு 15,000 டாலர் (ரு 1.8 இலட்சம்) செலவி ப்படுகிறதாம்.

இந்த விருந்தில் கலந்துகொள்ள வெளியூர்களிலிருந்து வரும் நாடாளுமன்ற—ட்டமன்ற உறுப் பினர்கட்கு, அவர்கள் தங்கள் மனைவியர்களையும் உடன் அழைத்துவர பயணச் சலுகை வழங்கப்படிருக்கிறது. இதனுல் ஏராளமான பணச் செலவு ஏற்படும். ஏனெனில் இப்போது நாடாளுமன்றக் கூட்டம் நடைபெறவில்லை. உறுப்பினர்களின் அனைவரும் அவரவர் சொந்தத் தொகுதிகளுக்குத் திரும்பியிட்டனர்.

விருந்துக்கு மட்டும் தலைமையமைச்சரின் அலுவலகம் எவ்வளவு செலவிட்டுப் போகிறது என்பது அறிவிக்கப்படவில்லை; அது, இரகசியமாகவே உள்ளது.

நிஜலிங்கப்பாவின் பதவிக்கு யார்?

மே 23-ஆம் நாள் நடைபெற விருக்கும் மைசூர் மாநில காங்கிரசுக் கட்சியின் புதிய தலைவர் தேர்தலில், போட்டி ஏற்பட்டே தீரும் என்ற நிலே உருவாகியிருக்கிறது

தலேவர் தேர்தலுக்குப் போட்டியுடின்ற பொதுப் பணித்துறை அமைச்சர் வீரேந்திர பட்டில் ஆதரவாளர்களும்—முன்னுள் முதலமைச்சரும் தற்போதைய உணவு அமைச்சருமான ஜட்டி ஆதரவாளர்களும் பலப் பரீட்சையில் இறங்கியிருக்கிறார்கள்.

ஆர்ப்பரிக்கும் காங்கிரசாரின் அன்றைய நிலை என்ன?

சென்னை, மே 22—

"ஒரு சிறு இரயில் நிலையத்தின் பெயரை மாற்றுவது என்ருல் கூடத் தமிழ்நாட்டின் பரிந் துரைக்கு டெல்லியிலே மதிப் புக் கிடையாது.

நமது மாநில் செலவில் போடு கிற திட்டத்துக்குக்கூட — ஐந்து கோடி ரூபாய்க்கு மேற் பட்டால் — மத்திய அரசின் ஒப்புதலேப் பெற வேண்டும்.

ஆலே முதலாளிகள் அவர்கள் விருப்பத்துக்கு ஆலேகளே மூடுகிறார்கள்; 'மூடாதே' என்று தடுக்கவோ, மூடியதை எடுத்து நடத்தவோ மாநில அரசுக்கு முடியாது; மத்திய அரசு, அதுபற்றிக் கவல கார்ட்டவே மறுக்கிறது.

"1965—66-ல் எட்டு ஆலேகள் கோலையில் மூடப்பட்டன; காங்கிரசார் வாய்திறக்க வில்லே! காங்கிரசு அமைச்சர்கள் கழக அரசைப்போல் கவலேப்படவில்லே! இப்போது மாநில அரசு, ஆலேத் தொழிலாளர் பிரச்சினேயை அக்கறையோடு கவனிக்கிறது.

"எட்டு ஆலேகளே மூடியபோது சும்மாக் கிடந்த காங்கிரசுக் காரர்கள், இன்று முரசு கொட்டுகிறார்கள்! 'ஆலே பிரச்சினே மத்திய அரசுப் பிரச்சினே' என்று தெரிந்தும், மக்களிடம் அபியாதவர்கள் பேசுகிறார்கள்!

"மத்திய அரசுக்கும் ஒன்று சொல்வேன்—மத்திய அரசு என்பது சிலகிழிப் பூச்சி போலவும், மாநில அரசுகள் சிலந்தி வலே ங்கள் போலவும் இருந்திட வேண்டுமெனக் கருதிடலாகாது!

"மத்திய அரசு நிலவாவதும், மாநில அரசுகள் கட்சத்திரங்களாகவும் இருந்திடவேண்டும் மத்திய அரசு, அதிகாரக் குவியலில் கிடங்கராக இருக்கக் கூடாது!

"பாதுகாப்பு—வெளிநாட்டு உறவு—போக்குவரத்து போன்றவைகளே மத்திய அரசு வைத்துக்கொண்டு, மற்ற அதிகாரங்களே மாநிலங்களுக்கு வழங்கிட வேண்டும். இங்குக் கொள்கைக்காக தி. மு. முகம், ஆளுங்கட்சியாக இருக்கும் போதும் சரி—எதிர்க் கட்சி யாளுலும் சரி—தொடர்ந்து போராடும்."

---அமைச்சர் மு. கருணுநிதி

(சென்னை 26-வது வட்டக் கூட்டத்தில்)

தமிழக மின் குழு

விளம்பர அறிக்கை

மூக்காணும் பொருட்கள் வழங்குவதற்கான முத்திரையிட்ட வில் ஒப்புக்கள் (Sealed Tenders) அடியில் கையொப்பமிட்டவரால் வரவேற்கப்படுகின்றன. வில் ஒப்புக்கள் 12—6—68-ந் தேதி பிற்பகல் 1 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.

வரிசை எண்	சாற்றுக் குறிப்பு எண்	பொருட்களின் விவரம்	தேவைப்படும் அளவு
1.	TRP 3/63—69	24' நீளமுள்ள கார்பிரீட் கம்பங்களுக்கான இரும்பு கம்பிப் பிளிஞ்ஞான கிரில்	600 எண்ணிக்கைகள்
2.	TRP 4/63—69	'S' டைப் டிஸ்டிரிபூஷன் பெட்டிகள்	800 எண்ணிக்கைகள்
3.	TRP 5/63—69	கருங்கல் ஜல்லி அளவு ½"×1"	400 யூனிட்டுகள்

மேற்படி பொருட்களைப் பற்றிய குறிப்புகள், ஏனைய நிபந்தனைகள் அடங்கிய பாரதிலை (Tender Specification Forms) பிற்பகல் 1 மணிவரை வர் கட்டிய ரூ. 5·15 வீதம் (நிருபயிப் பெறக்கூடியதில்), 'தலைமைக் கணக்காயர் (செலவுப் பிரிவு), நிருபரி மின் அமைப்பு, மன்னர்பாள் நிருபரி" என்கிறவாறான செலுத்தப்பட்ட மனியார்டர் மூலமாகவோ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மனியார்டர் கூப்பனில், தேவையான சாற்றுக் குறிப்பு எண் தெளிவாகக் குறிப்பிடப்படாமல் இருந்தால், மனியார்டர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

வில் ஒப்புக்கள் 12—6—68-ந் தேதி பிற்பகல் 3-மணிக்கு, அவ்வமைய வந்திருக்கும் பிரதிநிதிகள் முன்னிலையில் நிறக்கப்படும். குறிக்த காலத்திற்குப் பின்னர் வந்து சேரும் வில் ஒப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

மேற்கண்ட பொருட்கள் வழங்குவதற்கான உத்தரவை ஒருவருக்கோ அல்லது பலருக்கோ கொடுக்கும் எந்த ஒருவருடைய வில் ஒப்புக்களையோ அல்லது அத்தனை பேர்களுடைய வில் ஒப்புக்களையோ முழுவதையோ ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அடியில் கையொப்பமிட்டவருக்கு உரிமையுண்டு.

பிரதிகள் வேறு நபருக்கு மாற்றிக்கொள்ளக்கூடியதல்ல. தபாலில் எடுப்பு வரும் போது பிரதிகள் தபாலிட்டால் அதற்கு இந்தக் குழு பொறுப்பாகாது.

மன்னர்புரம், தபால் பெட்டி எண் 51, திருச்சி-1 } மேற்பார்வைப் பொறியாளர், திருச்சி மின் அமைப்பு

திருச்சியில் சிறப்புக் கூட்டம்

திருச்சி மாவட்ட தி.மு.க. சார்பில், தென்காசித் தொகுதி இடைத்தேர்தல் நிதிக்காக 24—5—68 காலே 9 மணிக்கு தேவர் மன்றத்தில்; தலேவர்: அன்பில் தர்மலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணு நிதி, து. ப. அழகமுத்து எம்.எல்.ஏ., ஜி. பிராங்குசம எம்.எல்.சி., மற்றும் திருச்சி மாவட்டச் சட்டமன்ற உறுப் பினர்கள்.

இக்கூட்டத்தில், திருச்சி புதுக் கோட்டைப் பொதுமக்களால் வாங்கிக் கொடுக்கப்பட்ட காரை, அமைச்சர் மு. கருணு நிதி அவர்கள், தே தமிழர் எம். எஸ். மணி அவர்களுக்கு வழங்குவார்.

இரயிடே முன்னேற்றக் கழகத்தினர், திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்கள் ஆலோசனைப்படி, வெளியிடு பவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அமுதிடி அச்சகத்தில் (24, ருக்மணிராணன் செட்டித் தெரு, சென்னை-13) அச்சிடு வெளியிடுகிறது.

தனத்தையும் சேர்த்து மக்களின்...

(8-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோட்டை ஏற்படுத்திக் கொண்டு அதைத் தகர்க்க முடியாத அளவுக்குச் செயலே உறுதிப்படுத்திக் கொள்ளுவோம்.

மே 19-ம் நாள் சென்னை மவுண்ட் ரோடிலுள்ள அரசினர் கலேக் கல்லூரியில் நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமிற்குத் தமிழக அரசு சிறுசேமிப்பு இயக்குநர் திரு. எல். எம். வாசகம் ஐ.ஏ.எஸ். தலேமைதாங்கினர்.

மத்திய அரசு தேசிய சேமிப்பு நிறுவனத்தின் வட்டார இயக்குநர் திரு ஜி. இராமச்சங்கரன், 'சேமிப்பு பற்றி ஏனேனுக்கெனின் பய்கும்' என்ற பொருள்பற்றிப் பேசினர்.

மற்றும், கலேக் கல்லூரிப் பேராசிரியர் ஆர். செல்வநாதன், இன்ருள்ளசுத துறையில் மிகுந்த அனுபவம் பெற்ற இராங்கன், சென்னை நகரச் சிறு சேமிப்பு ஏஜெண்டுகளின் சங்கச் செயலாளர் எம். வி. பரமேசுவரன், மத்திய சிறு சேமிப்பு ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் திருமதி இந்திரா இராமதுரை, அஞ்சலகச் சேமிப்பு பாங்கு உதவி இயக்குநர் சங்கண்ணு, தேசிய சேமிப்பு நிறுவனத்தின் உதவி இயக்குநர்கள் சீனுவாசன், கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறு சேமிப்புப் பற்றி எடுத்துரைத் தார்கள்.

மாலேயில் சிறு சேமிப்புத் துணேத் தலேவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள், கடந்த ஆண்டு ளில் சிறப்பாகப் பணியாற்றிய ஏஜெண்டுகளுக்குப் பரிசு வழங்கிச் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

தமிழக அரசு சிறு சேமிப்பு இயக்குத்தின் உதவி இயக்குநர் ஸ்ரீகண்டன் நன்றி கூறினர்.

கடற்கரை லாரி மீது துப்பாக்கிச் சூடு

81 மூட்டை அரிசி சிக்கியது

மதுரை, மே 21—

திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்துக்கு அரிசி கடத்திய லாரி ஒன்றைத் தடுத்து நிறுத்த முயன்ற பொருட்கு போலீசார் 8 ரவுண்டுகள் சுட்டனர்.

லாரியிலிருந்து டிரைவரும், கிளீனரும் உடனே தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்பட்டது.

லாரியில் இருந்த வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

81 மூட்டை அரிசி கைப்பற்றப் பட்டது.

துப்பாக்கிச் சூடு குறித்து ரெவினியூ டிவிஷனல் அதிகாரி விசாரணை நடத்திவருகிறார்.

பயிற்சி முகாம் நிகழ்ச்சிகள்

சென்னை நகரச் சிறு சேமிப்பு ஏஜெண்டுகளின் பயிற்சி முகாம்,